[27th November 1970

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தீர்ப்புக்கு முன்னால் இதே பணியாளர்கள்தான் இருந்தார்கள். தீர்ப்புக்குப் பிறகும் அந்தப் பணியாளர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே பணியாளர்களை அதிக மாக்கவில்லை. நீதிபதி குறிப்பிட்டதைப் போல, தனியாக ஒரு 'செல்' அமைக்கப்படவில்லை. அதன் காரணமாக, பல இடங்களில், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், இந்தத் திருட்டுகள் அதிகமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அரசு கவனத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்குமா, தனியாக ஒரு விசேஷப் பிரிவை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தீவிர முயற்சிக்கு அங்கத்தினரின் கேள்வி பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

College of Indian Systems of Medicine, Palayamkottai

*3. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that admissions are made only for Siddha system of medicine in the College of Indian Systems of Medicine, Palayamkottai ; and

(*b*) if so, whether there is any proposal to admit students for Ayurveda and Unani systems of medicine also ?

பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பாளையங்கோட்டையில் உள்ள இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவ முறை வகுப்புகளில் மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், ஆயுர்தேவ, யுனானி மருத்துவ முறை வகுப்பு களிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த பி.ஐ.எம். மாணவர்களில் ஒரு பகுதியினர் 1967-ம் ஆண்டிலேயே வெளியே வந்துவிட்டார்கள். அதில் 50 மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியே வந்தார்கள். நவம்பரில் மூன்றாவது பகுதியினர் வெளியே வரவிருக்கி றார்கள். இந்த 50 டாக்டர்களைப் பொறுத்த வரையில், அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்பு இல்லாமல் உள்ள நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களிலும் முனிசிபாலிடிகளிலும் வேலை அளிப்பதாக முன்னால் இந்த அரசாங்கம் தெரிவித்திருந்தது. ஆனால் இன்று வரையில் அரசாங்கத்தால் ஒருவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப் படவில்லை என்பதை மனதில் கொண்டு அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா ?

27th November 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும், சில குறிப்புகளைச் சொல்கிறேன். அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அதில் அவர்களை நியமிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது தவிர, இந்து அறநிலையக் கட்டளையைச் சேர்ந்த தனிப் பகுதியோடு இதனையும் கலந்து அதற்கான அமைப்பை நிறுவ வரைவுத் திட்டம் வந்து சேரவில்லை. அதில் 9 பெரும் கோயில்கள் சார்பில் வைக்கலாம் என்ற ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அத்திட்டம் வந்தால் கணிசமான அளவில் அவர்களை ஏற்றுக்கொள்ளலாம். படித்து முடித்த அத்தனை டாக்டர்களுக்கும் வேலை ஏற்படுத்தித் தருவது அரசாங்கத்தினால் இயலாத ஒன்று. குறிப்பிட்ட அளவில் அரசாங்கம் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர முடியும். மற்ற மருத்துவ வல்லுனர்களைப் போன்று அவர்களே தொழில் செய்வதற்கான முயற்சிகளை செய்யத் தொடங்கினால்தான் ஓரளவுக்கு வெளியே வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படக்கூடும். சித்த மருத்துவப் பிரிவுகளை ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்படுத்த முடியுமா என்று பரிசீலனை செய்யப்படுகிறது. விரைவில் அதுபற்றிய முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அந்த மருத்துவக் கல்லூரி ஏற்பட்ட பின் அதில் பட்டம் பெற்று ஒரே தடவையில் 50 பேர்கள்தான் வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களில் யாருக்குமே வேலை கிடைக்கவில்லை என்று சொல்வது உண்மைதானா ? யாரேனும் ஒரு சிலருக்காவது வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படிக் கொடுக்கப்படாத நிலைமை இருக்குமானால், வேறு திட்டம் போட்டு, இந்தக் கல்லூரியில் படித்து வெளியேறியவர்களுக்கு சாதாரணமாக வேலை கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சிலருக்கு அந்தக் கல்லூரியில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தலைமை மருத்துவ மனையில் இந்த நிலையங்களை அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. முதலில் குறிப்பிட்டபடி, அத்திட்டத்தை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதன்படி கணிசமான அளவு அவர்களுக்கு இடம் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. ராஜாராம் : மாற்றுத் திட்டம் போட்டு, ஆயுர்வேதம், யுனானி போன்றவைகளிலும் அலோபதி போன்றவைகளிலும் பயிற்சி கொடுத்து சாதாரணமாக மற்ற இடங்களிலும் அவர்கள் தொழில் செய்யும் வாய்ப்பை உண்டுபண்ண அரசாங்கம் முன்வருமா ? சில தினங்களுக்கு முன்னால் அவர்களுடைய 'தூது கோஷ்டியினர்', எஸ்டிமேட் கமிட்டி அங்கே சென்றிருந்தபோது, வந்து பார்த்தார்கள். யாருக்குமே வேலை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அதனால்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஒரு சிலருக்காவது அந்தக் கல்லூரியில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து சந்தோஷம். அப்படியே மற்றவர்களுக்கும் மாற்றுப் பயிற்சி கொடுத்து வேலை வாய்ப்பு அளிக்க வழி செய்யப்படுமா ?

[27th November 1970

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : முதலில் 1964-ல் பாளையம்கோட்டையில் இந்திய மருத்துவக் கல்லூரிதொடங்கப்பட்டது. சித்த மருத்துவத்திற்கு 30 இடங்களும், ஆயுர்வேதத்திற்கு 20 இடங்களும், யுனானிக்கு 11 இடங்களும் ஒதுக்கப்பட்டன. ஆயுர் வேதத்திற்கும், யுனானிக்கும் யாரும் வராத காரணத்தால், 65 இடங் களும் சித்த மருத்துவதத்திற்கே தரப்பட்டன. பிறகு எண்ணிக்கை அதிகமாகிறது என்று கருதி, 30 மாணவர்கள் ஆண்டு ஒன்றுக்கு எடுக்கும் நிலைமை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலில் கூறியபடி, அவர்களை வேலையில் அமர்த்தும் முயற்சியில், அதற்கென்று நியமிக்கப் பட்டுள்ள தனி இயக்குனர் விஷயத்தை ஆராய்ந்து வருகிறார். முடிவு தெரிந்தபிறகு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி என்று சொல்கிற முறையில் பரிட்சையில் தேறி விட்டு வேலை கிடைக்காமல் இருப்பதாகக் கூறினார்கள். இந்த சித்த வைத்தியத்தில் ஏராளமான தைலங்களையும், லேகியங்களையும் மக்கள் உபயோகிக்க வேண்டியிருப்பதால், அவற்றிற்காக மக்கள் அலைந்து கொண்டிருப்பதால், அப்படி அவற்றைத் தயாரிப்பவர்களுக்கு அரசாங் கம் 'எய்டு' அதாவது பண உதவி செய்து, அந்த மருந்துகளைத் தயாரித்து நாட்டிலே வியாபாரம் செய்ய சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பி னர் கூறியதைப் போன்று யாராவது இந்தத் தொழிலை மேற்கொண்டு மருந்துகளை உற்பத்தி செய்ய முன்வந்து உதவி தேவை என்று கேட்டால், அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்கலாம்.

Labour Disputes

*4. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Labour and Backward Classes be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have requested the Government of India to transfer the power to deal with Labour disputes in Government of India undertakings to the State Labour Department ; and

(*b*) if so, the reply received from the Government of India ?

தொழிலாளர் தகராறுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர்—பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இந்திய அரசு உடமை நிறுவனங்களில் எழும் தொழிலா ளர் தகராறுகளைத் தீர்ப்பதற்கு இம் மாநிலத் தொழிலாளர் துறைக்கு அதிகாரங்களை மாற்றித் தருமாறு இவ்வரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து இந்திய அரசிடமிருந்து வந்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) இந்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.